முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 280/2022

நாள்: 25.09.2024

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திருமதி G.ரேவதி, G.ரேவதி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோகன் | வயது | : | 55 |
| தந்தை பெயர் | : | ஜெயராம் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | தொழில் |

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வழக்கு 1 மற்றும் 2 வது அயிட்ட சொத்துக்கள் என் தந்தை கிரயம் வாங்கியது என்று சொன்னால் சரிதான்.

2) 3 மற்றும் 4 ம் இன சொத்துக்கள் என் தாயார் கிரயம் வாங்கியது என்றால் என் தந்தை கிரயம் வாங்கியது.

3) என் பெற்றோர் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை.

4) மேற்படி சொத்துக்களுக்கு வாதி மற்றும் பிரதிவாதிகள் 3 பேரும்தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

5) வாதி வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் பாகத்தை பிரித்து தர சொல்லி என்னிடம் கேட்கவில்லை.

6) பதில் அறிவிப்பு அனுப்பினேன். பாகம் உண்டு என்று சொன்னேன். பாகத்தை பிரித்து தரமாட்டேன் என்று சொல்லவும் இல்லை.

7) சொத்தின் மீது கடன் உள்ளது என்பதாலும் அதை முடித்துவிட்டு கொடுக்கலாம் என்று சொன்னேன்.

8) என்னுடைய பதில் அறிவிப்பு , எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம்

ஆகியவற்றில் கடன் இருப்பது குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

9) எவ்வளவு கடன் உள்ளது என்பதையும், யாரிடம் கடன் வாங்கப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10) அந்த கடன் என்பது என்தந்தை பெயரில் 12 கடைகள் கட்டுவதற்கு வாங்கப்பட்டது. அந்த கடனை கட்டுவதற்கு அப்பா பெயரில் உள்ள சொத்தில் கடன் வாங்கி கடன் அடைக்கப்பட்டது.

11) 12 கடைகள் என்பது 1 வது அயிட்ட சொத்து . கடையின் பேரில் எந்த கடனும் இல்லை என்றால் சரிதான்.

12) அந்த கடனை அடைப்பதற்கு அப்பா பெயரில் உள்ள சொத்தின் பேரில் கடன் வாங்கியதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13) 3,4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எந்த கடனும் இல்லை.

14) 12 கடைகளும் வாடகைக்குவிடப்பட்டு வாடகை வசூல் செய்யப்படுகிறது. அந்த வாடகைதாரர்களிடம் முன்பணம் நான்தான் வாங்கினேன். மாத வாடகை நான்தான் வாங்கி வருகிறேன். வாடகை ஒப்பந்தம் கிடையாது. வாடகை ரசீது கொடுப்பது கிடையாது.

15) யார் யாரிடம் எவ்வளவு முன் பணம் பெறப்பட்டது, மாத வாடகை எவ்வளவு என்ற விபரங்கள் என்னுடைய பதில் அறிவிப்பு , எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

16) மேற்படி வாடகைகளை நீதிமன்றத்தில் கட்ட சொல்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை.

17) வாடகை வருமானத்திற்கு ஜி,.எஸ்.டி நான் கட்டுவது இல்லை. வாடகைதாரர்கள் கட்டுகிறார்களா என்று எனக்கு தெரியாது.

18) அனைத்து கடைகளுக்கும் சேர்த்து மாத வாடகை இரண்டரை லட்சம் என்றால் இல்லை.

19) தற்போது மாத வாடகை ரூ.1.70,000/ வருகிறது. வழக்கு தாக்கல் செய்யுமபோது மாத வாடகை ரூ.1,50,000/ ம் ஆகும்.

20) வழக்கு தாக்கல் செய்தபிறகு வாதியின் வங்கி கணக்கில் மாதம் ரூ.15 ஆயிரம் செலுத்தி வருகிறேன்.

21) நான் வியபாரம் செய்கிறேன்.. மற்ற பிரதிவாதிகளும் வியபாரம் செய்து வருகிறார்கள்.

22) வாதி கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றினார். அவர் குடும்பம் திருச்சங்கோடில்தான் உள்ளது.

23) தஞ்சாவூர் மாரியம்மன்கோவில் அருகே வாதி பெயரில் ஒரு வீடு வாங்கப்பட்டது. அதற்கான வாடகையை நான்தான் வசூல் செய்து வந்தேன்.

24) அந்த வீட்டில் இருந்த வாடகைதாரரை வெளியேற்றுவதற்கு வழக்கு நடைபெற்று வருகிறது. அந்த வழக்கிற்கு பிறகு வாடகை தொகையை நான்தான் வாங்கி வருகிறேன்.

25) வாதியின் மகன் பெயரில் பிளாட் உள்ளது. வாதியின் மூத்த மகன் சி.ஏ படித்து வருகிறார். அவர் என்ன வேலையில் உள்ளார் என்று எனக்கு தெரியாது. அவரின் கல்யாணத்திற்கு நான் போகவில்லை என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது.

26) வாதியின் பெயரில் எல்.ஐ.சி பிரிமியம் நான்தான் செலுத்தி வருகிறேன்.

27) மாரியம்மன்கோவில் தெருவில் உள்ள வீட்டில் இருந்து வரும் வாடகையை நான் வாங்கி கூட்டு குடும்ப கடனை அடைத்து வருகிறேன். மாத வாடகை ரூ.1700/ ஆகும்.

28) ஒரு காலாண்டுக்கு வாதி பெயரில் உள்ள எல்.ஐ.சி பிரிமியம் ரூ.1839 / ஆகும்.

29) என் பெயரில் மற்றும் மற்ற பிரதிவாதிகள் பெயரில் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் என் பெயரில் கிடையாது. மற்ற பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. என் பிள்ளைகள் பெயரிலும் சொத்துக்கள் இல்லை.

30) மற்ற பிரதிவாதிகள் பிள்ளைகள் பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

31) மற்ற பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்துக்கள் கூட்டுகுடும்ப சொத்துக்கள்தான். அந்த சொத்துக்களில் இருந்து வருமானம் கிடையாது.

32) இந்த விபரங்களை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் மற்ற பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்துக்களை வழக்கு அறிவிப்பிலும் வழக்கிலும் வாதி சொல்லவில்லை.

33) குடும்ப சொத்து வருமானத்தை பொறுத்து ஆடிட் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது.

34) குபேந்திரன்.,ரவிச்சந்திரன் ஆகியவர்கள் பெயரில் உள்ள சொத்துக்களில் எனக்கு பாகம் உண்டு.

35) என் குடும்பத்தில் சம்பாதிக்கும் நபர் வாதி மட்டும்தான் என்றாலும் அவர் வருமானத்தை கொண்டு மாரியம்மன்கோவிலில் உள்ள வீட்டை வாதி வாங்கினார் என்றால் சரியல்ல.

36) வாதிக்குரிய பங்கை நான் ஒப்புக்கொண்ட போதிலும் அதில இருந்து வரும் வருமாணத்தை கொடுக்கக்கூடாது என்று இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

37)சொத்துக்களின் மீது கடன் இருப்பதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல.

38)வாடகையை கொண்டு கடனை அடைத்து வருவதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல.

39) வாதியின் மகனின் பெயரில் உள்ள கல்வி கடனை நான் செலுத்தி வருவதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/K.பூரண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்